புதுக்கோட்டை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு க.மனோகரன், பி.எஸ்ஸி(விவ).,

செமுக.அ4/1829/2018 நாள் 03. 6.2018

பொருள் பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - செல்வி ஆ.லலிதா தட்டச்சர் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ன் கீழ் 2015-16-ம் ஆண்டில் தட்டச்சராகத் தேர்வு செய்யப்பட்டு குடுமியான்மலை, இயக்குநர்-ஸ்டாமின் அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டவர் - பணி வரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 க.எண்.5843/PSD-A2/2017, நாள் 05.10.2017
2. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செமுக.அநிபி3/97065/2017, நாள் 20.10.2017
3. புதுக்கோட்டை, வேளாண்மை இணை இயக்குநர் செமுக.அ4/13117/2017, நாள் 30.10.2017
4. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் க.எண். அபபி3/159754/2017-1, நாள் 30.1.2018

.. .. ..

ஆணைகள்:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி-IV ன் கீழ் 2015-16ம் ஆண்டில் தட்டச்சர் பதவிக்கு பார்வை 1-ல் கண்டவாறு தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2 -ல் கண்ட ஆணையின்படி தட்டச்சராகப் ஆகப் பணி நியமனம் வழங்கும் பொருட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி ஆ.லலிதா, தட்டச்சருக்கு பார்வை 3-ல் கண்ட ஆணையின்படி ரூ.19500-62000 என்ற ஊதிய விகிதத்தில் குடுமியான்மலை, இயக்குநர்-ஸ்டாமின் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தனியர் 01.11.2017 பிற்பகல் மேற்கண்ட அலுவலகத்தில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்து கொண்டார்.

தனியரின் பணியினை வரன்முறை செய்திட பார்வை 4-ல் கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து, அன்னவர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 01.11.2017 முற்பமுதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது. "This regularization is subject to the outcome of the W.P's pending on the files of the Honourable High Court of Madras/Madurai Bench of the Honourable High Court of Madras relating to Group IV 2015-16 recruitment."

த.பி.பா.,

செல்வி ஆ.லலிதா, தட்டச்சர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை, மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

ஓம்/-க.மனோகரன்,
வேளாண்மை இணை இயக்குநர்
புதுக்கோட்டை

பெறுநர்

செல்வி ஆ.லலிதா,
தட்டச்சர்
இயக்குநர்-ஸ்டாமின், குடுமியான்மலை மூலமாக

நகல்: இயக்குநர்-ஸ்டாமின், குடுமியான்மலை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

தனியரின் பணிப்பதிவேடு மற்றும் பதிவுறுத்தாள் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
(அபபி.3 பிரிவு)

//உத்தரவின்படி//

கண்காணிப்பாளர்
4.6.2018

மே.கு. கோப்பு எண்: அ/2211/17 நாள்: .06.2018

நகல் உரியவருக்கு அனுப்பப்படுகிறது.

இயக்குநர்

பெறுநர்,
செல்வி. ஆ.லலிதா,
தட்டச்சர் - இவ்வலுவலகம்.